20-10-68

விலை 20 காசு

கேள்வி ? பதில்

1. நிஜலிங்கப்பா சுப்பிரமணியம் கட்சியா? காமராசர் கட்சியா?

காமராசர் கட்சி என்றுதான் தெரிகிறது! கோசல்ராம், மகாலிங்கம் போன்றோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி இருப்பதிலிருந்தே தெரியவில்லையா?

2. காங்கிரசுக் கூட்டங்களுக்கு இப்போது அதிகக்கூட்டம் கூடுவதாகச் சொல்லப்படுகிறதே, உண்மையா?

அப்படித்தான் அவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள், புதிய புதிய பாணியில் எப்படி எப்படியெல்லாம் பொய் சொல்ல முடியும் என்பதற்கு இப்போது ஒத்திகை பார்க்கத் தொடங்கி இருக்கிறார்கள். கொஞ்சநேரம்,சிரித்துக் கொண்டிருந்துவிட்டு வரலாமே என்பதற்காகக் கூடுகிறார்களோ என்னவோ!

3. பொதுத் தேர்தலுக்குப் பிறகு மக்கள் மனோபாவம் மாறிவிட்டது என்று காங்கிரசார் பேசுவது எதைக் குறிக்கிறது?

தென் சென்னை, சங்ககிரி, தென் காசித் தேர்தல்களை நினைத்துப் பார்த்து, நடைபெறப்போகும் மாநகராட்சித் தேர்தல் முடிவை இணைத்துப்பார்த்து, தங்களுக்குத் தாங்களே இப்படிப் பேசிக் கொள்வதில் என்ன தவறு கண்டீர்கள்?

4. பூமிக்கு நிழல் உண்டா?

உண்டு என்றும், அந்த நிழல் விண் வெளியிலேயே விழுந்து மறைந்து விடுவதாகவும் இது தொடர்பான ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

5. தண்ணீர் வரி, சாக்கடை வரி, விளக்கு வரி போன்றவைகள் காங்கிரஸ் காலத்தில் விதிக்கப்படவில்லையா?

சுப்பிரமணியனாரின் பேச்சை எடுத்துக்காட்டுகிறீர்களா? அப்படி அவர்கள் வாங்கவில்லை என்று முதலில் நிருபிக்க வேண்டும்; அடுத்து மாநகராட்சிக்குப் பதவிக்கு வந்தால் நீக்கி விடுவதாக உத்திரவாதம் அளிக்கவேண்டும். அவர் தயாராக விருக்கிறாரா என்று கேட்டுச் சொல்லுங்கள்.

6. கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் எல்லாம் கழகத்துக்கு ஓட்டுப்போட்டு விட்டார்கள் என்று காமராசர் சொல்லவில்லை என்று காங்கிரஸ் ஏடொன்று கூறுவது உண்மைதானே!

காங்கிரஸ் ஏடு கூறுவது உண்மைதான்! காமராசர் அல்லவா அப்படிக் கூறி இருக்கவேண்டும். கடந்த மாநகராட்சித் தேர்தல் முடிவு அறிவிக்கப் பெற்ற ஆத்திரத்தில் உமிழ்ந்துவிட்ட வார்த்தைகள் இப்போது காமராசருக்கு நினைவு வருமா? வந்தாலும் ஒத்துக்கொள்வாரா?

7. செத்துப் போவோர் எல்லோருமே காங்கிரசுக்காரர்கள்தானா?

அப்படியானால் காங்கிரஸ் செத்துக்கொண்டிருக்கிறது என்றல்லவா கூறவேண்டி இருக்கும்!

8. நடைபெற்று முடிந்த பரிசுச் சீட்டுக் குலுக்கலில் ஒரு காங்கிரசுக்காரருக்குக் கூடவா பரிசு கிடைக்கவில்லை?

கிடைத்திருக்கக்கூடும். ஆனாலும் அவர் இப்போது எப்படி ஐயா வெளிப்படையாகச் சொல்வார்?

9. தமிழக அரசின் பரிசுத் திட்டம், மத்தியஅரசின் பாராட்டைப் பெற்றிருப்பது எதைக் குறிக்கிறது?

ஒவ்வொரு மாதமும் பத்துக்கும் மேற்பட்ட லட்சாதிபதிகளை உருவாக்கித் தரும் அளவுக்குப் பெருவாரியாக மக்கள் அதற்கு ஆதரவு காட்டவேண்டும் என்பதை!

10. சீன அரசு ஏதோ 'களை எடுப்பு' வேலையில் இறங்கி இருக்கிறதாமே?

சீனக் கம்யூனிஸ்டு கட்சிக்குள் காளான்கள் மிகுந்து விட்டதாகவும், உடனடியாக அவை களை எடுக்கப்பட மாசே துங் உத்திரவிட்டிருப்பதாகவும் சீனரேடியோ அறிவித்திருப்பதாகச் செய்தி வந்திருப்பதுதான் தெரிகிறது.

11. கட்சி விவகாரங்களைக் கவனிக்கும் பொறுப்பு என்ற பேரால், காமராசர் தமிழ்நாட்டை விட்டு அப்புறப்படுத்தப் படுகிறாரா என்ன?

நீங்கள் மிகத் துணிச்சல்காரராக இருக்க வேண்டும்! காங்கிரசின் சரிவைச் சரி செய்ய அதனைச் சில மண்டலங்களாகப் பிரித்து ஒரு மண்டலத்தின் பொறுப்பை காமராசரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். வங்கப், அசாம், மணிப்பூர், நாகாலாந்து, திரிபுரா ஆகிய பகுதிகளடங்கிய ஒரு மண்டலம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதாம்! காமராசருக்குத் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பை இதன் மூலம் சரி செய்து மறைத்து விடக்கூடிய ஏற்பாடாகவும் இது இருக்கக் கூடும். அல்லது நீங்கள் நினைப்பதுபோல், வினைதொல்லைகளில் ஏன் அவரை விழச் செய்ய வேண்டும்—என்ற எண்ணத்தில் 'நீங்கள் இங்கேயே இருங்கள் ஐயா' என்றும் கூறி இருக்கக் கூடும்! இவையெல்லாம் காங்கிரசுக்கட்சி விவகாரங்கள்! நமக்கெதற்கு? விடுங்கள்!!

மாண்புமிகு அமைச்சர்
மா. முத்துசாமி
அவர்களது
இரஷ்யப் பயணம்
பற்றிய தொடர் கட்டுரை
நவம்பரிலிருந்து வெளிவருகிறது.

வாழும் நெறி இன்னதென் எந்த சூழ்நிலையிலும் தெளிய மாட்டாதிருப்போர், இயலாதவைகளைக் கோடிக்கணக்கில் மட்டும் அல்ல—பலகோடி எண்ணுவர்!

—குறள் (337)

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 20—10—68 இதழ் 13

மாநகராட்சித் தேர்தல்!

வருகிற 27—10—68-ம் நாள் சென்னை மாநகராட்சியின் தேர்தல் நடைபெற விருக்கிறது. மொத்தம் 120 வட்டங்களுக்கு 395 வேட்பாளர்கள் போட்டியிடப் போகிறார்கள்.

கழகமும், தோழமைக் கட்சிகளும், காங்கிரசும் நீங்களாக 155 சுயேச்சைகள் இந்தத் தேர்தலில் கலந்துகொள்கிறார்கள். கழகத்தினர் சிலர்கூட கட்டுப்பாடுகளை மீறி, சுயேச்சைகளாகச் சில பகுதிகளில் போட்டி இடுகிறார்கள்.

மாநகராட்சி மன்றத்தின் முக்கியப் பணி நகரின் சுகாதாரத்தைச் சீர்படவும் செழுமையுறவும் கவனித்து ஆவன செய்வதாகும். குடிநீர்ப் பிரச்னை. நகரத்தூய்மை அனைத்துமே சுகாதாரம் என்ற தலைப்புக்குள் அடங்கக் கூடியதுதான்.

இந்த வேலைகளைக் கவனிக்க, அரசியல் சார்புகள் எதுவும் தேவை இல்லை என்பதுதான் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களது இதய வேட்கையாகும். துரதிருஷ்ட வசமாக எந்த ஒன்றிலும் தன் கட்சி முத்திரை இருக்கவேண்டும் என்று உடும்புப் பிடியாகக் கொண்டிருக்கிற தமிழகத்தின் தலையாய எதிர்க்கட்சி காங்கிரஸ், இந்த அரிய ஏற்பாட்டுக்கு உடன்பட்டு வராததினாலேயே கட்சி முத்திரைகளுடன் அரசியல் கட்சிகள் இதில் பங்கேற்க முனைந்துள்ளன.

மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே கட்சி என்கிற போதுகூட அங்கும் இங்கும் சில முனுமுனுப்புக்கள் இருப்பதனைத் தடுத்து நிறுத்திவிடமுடியாது. மத்தியில் ஒன்று, மாநிலத்தில் ஒன்று என்று கட்சி வேறுபாடுடைய அரசுகள் அமைந்துவிட்டால் இந்த முனுமுனுப்பு இன்னும் கொஞ்சம் மிகுந்துதான் காணப்படும். இந்த நிலையில் அரசு ஒரு கட்சி, மாநகரம் ஒரு கட்சி என்ற நிலையில் கடந்த பத்தாண்டுக் காலமாக, நகரத்தின் உயர்வுக்கும் செழிப்புக்கும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி—மாநில அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தபோது பராமுகம் காட்டி வந்த நாட்கள் பலவுண்டு. திட்டங்களும் மிகவுண்டு.

அரசு ஒரு கட்சியும், மாநகரம் ஒரு கட்சியும் என்று இருக்கக்கூடாது என்பதல்ல நம் வாதம், ஒரு அரசியல் அமைப்பின் ஒட்டு மொத்தமான குரலாக விருந்து ஒரு கோரிக்கை விடுக்கப்படுகிறபோதே அலட்சியப்படுத்தப்படுகிற நிலைமை தோன்றிவிடும்போது, சுயேச்சையாளர்களாக வெற்றி பெற்று வந்து எதனைச் சாதித்துவிட முடியும்? முடியாது என்பதைச் சுட்டிக் காட்டவே இதனை எடுத்துக்காட்ட வேண்டி ஏற்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலின்போது நடைபெற்றுள்ள நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கிறபோது, சுயேச்சைகள் என்போர் தலைகுப்புறக் கவிழ்த்து விடப்பட்டிருக்கிறார்கள் என்பது புலனாகத்தான் செய்கிறது. என்றாலும், கட்சி அரசியல்முறை நாளுக்கு நாள் முக்கியத்துவம் பெற்றுவருகிற சூழ்நிலையில் "சுயேச்சை"யாகப் போட்டியிடும் மனோபலம் எப்படி ஒருவருக்கு ஏற்படுகிறது என்று நினைத்துப் பார்ப்பதே வியப்புக்குரியதாயிருக்கிறது.

மக்கள் சுயேச்சைகளை விரும்பவில்லை என்பதும் வாக்காளர்கள் அவர்களை ஆதரிக்கப்போவதில்லை என்பதும் தெளிவாகத் தெரிந்தாலும், அதிகபட்ச அளவுக்கு இவர்கள் விடாப்பிடியாகப் போட்டியிட முனைந்துவிட்ட இரகசியம் எதுவாக இருக்கமுடியும் என்றுதான் நினைத்துப்பார்க்க வேண்டியிருக்கிறது.

காங்கிரசைப் பொறுத்தமட்டில் எல்லா வட்டங்களிலும் போட்டியிடுகிறது. கழகம் 90 இடத்திலும் பிற 30 இடங்களில் தோழமைக்கட்சிகளும் போட்டியிடுகின்றன. தேர்தல் உடன்பாட்டின் இதயத்தைக் கொண்டு விளக்கவேண்டுமானால் காங்கிரஸ் 120 இடங்களிலும் எதிர்க்கப்படுகிறது என்றுதான் பொருள்.

இந்த நிலையில் மொத்தத் தொகுதிகளில் 88 இடங்களில் சுயேச்சைகள் இடை நுழைவுக்கு முனைந்திருக்கிறார்கள் என்கிறபோது, இது ஒரு தூண்டுதலின் அடிப்படையில் நடைபெற்றிருக்கக் கூடுமோ என்றும் நினைத்துப்பார்க்கவேண்டி நேருகிறது.

கடந்த காலங்களில் காங்கிரஸ் எப்படி மிகக் குறைந்த வாக்குகள் பெற்றாலும், வெற்றிவாய்ப்பை மட்டும் தட்டிக்கொள்கிறது என்பதன் சூட்சுமத்தை நன்கு உணர்ந்து அறிஞர் பெருந்தகை அவர்கள் செயல் பட்டதினால்தான் 1967ல் காங்கிரஸ் ஆட்சி பீடத்தை விட்டுத் துடைத்தெறியப்பட்டது.

அதே சூட்சும முறை மாநகராட்சித் தேர்தலிலும் கையாளப்பட்டது. காங்கிரஸ் எதிர்ப்பு வாக்குகள்

(15-ம் பக்கம் பார்க்க)

கவிஞர்களுக்கு ஒரு வாய்ப்பு!

'காஞ்சி'யில் கவிதைகளுக்குத் தரப்படும் வாய்ப்புகள்பற்றி அனைவரும் அறிந்திருக்கிறீர்கள்.

இதன் உச்சக்கட்டமாக மற்றுமொரு புதிய ஏற்பாட்டைத் தொடங்கவிருக்கிறோம்!

வெண்பாப் போட்டி

பல நூறு கவிஞர்கள் கலந்துகொள்ளும் நல்வாய்ப்பாக இருக்கும். இது தொடர்பாகக் கவிஞர்களின் கருத்துக்களை வரவேற்கிறோம்.

—ஆசிரியர்

ஒரே இரத்தம்

தென்னரசு

கதைக்குள் புகுமுன்......

நான் தொடர்கதை எழுதி எவ்வளவோ நாட்கள் ஆகிவிட்டன. தனிமையில் உட்கார்ந்து வானத்தை அண்ணாந்து பார்த்துக் கற்பனைசெய்து பல மாதங்கள் ஓடிவிட்டன. என்னால் எழுத முடியாமல் கழிந்துபோன இடைக் காலத்தில் என்னுடைய உள்ளத்தில், இருட்டில் பறந்து முட்டி மோதிக்கொள்ளும் வௌவால்களைப் போல் எத்தனையோ நிகழ்ச்சிகள் தோன்றி, அலைந்து, களைப்புற்றுக் கீழே விழுந்து விட்டன. வானத்திலிருந்து நட்சத்திரம் உதிரும்போது ஒளிமயமாக இருக்கும். ஆனால், அது பூமியை நோக்கி வருகின்றபோது அணைந்துவிடும். அதன் தடம் தெரியாமல் போய்விடுகிறது. அதைப்போல் சுவையான அந்த நிகழ்ச்சிகளை நினைத்து நினைத்துப்பார்த்தும் புலப்படவில்லை — அவைகளில் ஒன்று–சிறுபிள்ளைகள் கிழித்த கோடுகளைப் போல் அரைகுறையாக எனக்குத் தெரிந்தது. அதைத்தான் நான் இங்கே தொடர்கதையாக எழுத இருக்கிறேன்.

பொதுப்பணியின் காரணமாக என்னுடைய எழுத்துப்பணி என்னிடமிருந்து போய்விடுமோ என்ற கவலை கொஞ்ச நாட்களாக என்னை வாட்டிக்கொண்டிருக்கிறது. என்னுடைய எழுத்துப் பணியை நான் தள்ளி வைத்துக்கொண்டே வருவதால் மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள எனது நண்பர்களுக்கு என் மீது அன்புகலந்த கோபம் இருப்பதை உணருகிறேன். என்னுடைய நிலையை அவர்களுக்கு விளக்க முடியவில்லை. எழுதுவது என்பது வியர்வை சொட்டச் சொட்டப் பாடுபடும் வெறும் உடல் உழைப்பு மட்டும் அல்ல. அதற்கு மன உழைப்பும் தேவை. மனமும் உடலும் சேர்ந்து ஒத்துழைத்தால் தான் எழுத்தாளன் எழுத முடியும். அந்த ஒத்துழைப்பு எனக்குத் தொடர்ந்து கிடைக்காததால் என்னால் தொடர்ந்து எழுத முடியவில்லை.

சென்ற ஆண்டு காரைக்குடி அழகப்பா கல்லூரிக்கு முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் வருகை தந்திருந்தார்கள். அந்த விழாவில் என்னையும் என்னுடைய எழுத்துக்களையும் பாராட்டி அங்கு பேசப்பட்டது. நான் பேசுகையில், "நான் எழுத்தாளன் அல்ல, நான் ஒரு அரசியல் வாதி. நான் பின்பற்றும் அரசியல் கொள்கையின் வெற்றிக்கு ஒரு ஆயுதமாகத்தான் என்னுடைய எழுத்தை நான் பயன்படுத்துகிறேன்; அந்த அரசியல் கொள்கை பரிபூரண வெற்றி அடைந்து விட்டால் என்னுடைய பேனாவைத் தூக்கி எறிந்து விடுவேன்" என்று குறிப்பிட்டேன். இறுதியாக அறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்கள். அவரது பேச்சு முழுவதும் அன்புடனும் பரிவுடனும் என்னைக் கண்டிப்பதாகவே அமைந்து விட்டது. "தென்னரசு தன்னை முழுக்க முழுக்க அரசியல் வாதி என்று கூறிக்கொண்டார். எனக்குக்கூட அந்தத்துணிச்சல் கிடையாது. ஒரு காலத்தில் நான் பேனாவைத் தூக்கி எறிவேன் என்று அவர் குறிப்பிட்டது எனக்கு மிகுந்த மனச்சங்கடத்தை ஊட்டுகிறது. அரசியல்வாதி ஒரு எல்லையை வகுத்துக்கொண்டு நடக்கிறான். எழுத்தாளனின் கற்பனைக்கு எல்லையே கிடையாது. ஆகவே தென்னரசைப் போன்றவர்கள் அரசியலைக் காரணம் காட்டி எழுதுவதை நிறுத்துவது வரவேற்கத்தக்கதல்ல; அது சிறந்த முடிவும் அல்ல" என்று வெளிப்படையாக கோடிட்டுக் காட்டினார்கள். அதற்குப்பிறகு இரண்டு மூன்று முறை "என்ன, எழுதப்போகிறாயா இல்லையா?" என்று கடிந்து கொண்டார்கள்.

நானும் எழுதப் போகிறேன், எழுதப் போகிறேன் என்று சொல்லி "காஞ்சி"க்கு "கண்ணாத்தாள்" என்ற தலைப்பை அனுப்பி வைத்தேன். விளம்பரம் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. செட்டி நாட்டில் பிறந்து வளர்ந்த ஒரு சுமங்கலியின் சோகக் கதை அது. கதைக் குறிப்புகளை சேகரித்துக் கொண்டு கதை நிகழ்ந்த இடங்களையெல்லாம் போய்ப்பார்தேன் புகைப்படங்களையும் சேகரித்தேன். நாற்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த கதை அது.

நான் அந்தக் கதையை எழுதப் போவதாக அறிந்ததும் அந்தக் 'கண்ணாத்தாளி"ன் பேரப் பிள்ளைகள் என்னைப் பலமுறை சந்தித்து அந்தக் கதையை எழுத வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள். அதனால் படிப்படியாக அந்த முயற்சியை நான் கைவிட்டுவிட்டேன். எப்போதாவது அதைக் "காஞ்சி"யில் எழுதுவேன்.

எதையாவது எழுத வேண்டும், எப்படியும் எழுத வேண்டும் என்ற எண்ணம் எழுத்தாளர்களுக்கு இருக்கக்கூடாது என்பது எனது வலிவான முடிவு. பசிக்குப் பனம்பழம் சாப்பிடுவது, காய்ச்சல்காரன் குளிர் பானம் அருந்துவது, எப்படி உடம்புக்குத் தீது விளைவிக்கிறதோ, அதுபோலத்தான் எழுத்தாளர்கள் நினைத்ததையெல்லாம் எழுதி நிரப்புவதும், சில எழுத்தாளர்கள் கற்பனை செய்து வளத்தைப் புகுத்தி சிறப்புப் பெறுகிறார்கள். சிறந்த கற்பனைச்

சித்திரங்களை வரையக் கூடிய எழுத்தாளர்களுக்குக்கூட அவர்களது மனோ வேகத்திற்கு அப்பாற்பட்ட சில சம்பவங்கள் சிலரது வாழ்க்கையில் குறுக்கிடுகின்றன. இப்படியும் நடந்திருக்குமா என்று நாம் திகைக்கிறோம். கற்பனைக்கும் எட்டாத அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் கடந்த காலத்தில் ஒரு சில குடும்பங்களில் நிகழ்ந்திருக்கின்றன — கேட்டாலே மெய் சிலிர்க்கும்.

தாயின் எதிரே குழந்தையை நெருப்பில் வாட்டுகிறார்கள்!

கணவன் கண் எதிரே மனைவியைக் கற்பழிக்கிறார்கள்!

காப்பம் தரிக்காதவளுக்கு வளை காப்புப் போடுகிறார்கள்!

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை இயற்கைக்கு மாறானது என்பதால் எழுத்தாளர்கள் கற்பனை செய்து பார்ப்பதில்லை. கற்பனையாக எழுதினாலும் படிப்போர்க்கு விரசமாகத் தெரியும். ஆனால் உண்மையாக நிகழ்ந்திருக்கும்போது யார் என்ன செய்ய முடியும்?

எங்களது இராமநாதபுரம் சீமை காய்ந்து விளைகிற சீமை. மற்றதெல்லாம் பாய்ந்து விளைகிற சீமைகள். காய்ந்து விளையும் இராமநாதபுரம் சீமை கண்ணீரும் செந்நீரும் கலந்தது. களவும் திருட்டும் இல்லாமல் மானத்திற்காகவே, ஒருவர் இரத்தத்தை மற்றவர் வடித்து மண்ணைச் சிவப்பாக்கி மான மறவர் என்ற பட்டத்தை மட்டும் மிச்சமாக வைத்துக் கொண்டவர்கள் வாழும் பகுதி. அந்த மண்ணில் நடந்த ஒரு உருக்கமான உண்மைக்கதைதான் "ஒரே இரத்தம்."

"அபிமன்யு" — "அன்னம்மா" —இரண்டும் மறக்க முடியாத குணச்சித்திரப் பாத்திரங்கள். அதை போலவே "மங்களசாமி—மதுராம்பிகை" இருவரும் உங்கள் நெஞ்சை விட்டு அகலமாட்டார்கள். நீங்கள் யார் பக்கம் என்பதை கதை முடிந்ததும் சொல்லுங்கள். கதையைக் கூறாமல், ஏதோவொரு கற்பனை உலகுக்கு உங்களை அழைத்துச் சென்று விட்டேனா? மன்னியுங்கள். அடுத்த கிழமை வரை பொறுத்திருங்கள்!

[வளரும்]

காப்பேன் உன்னை!

எத்திக்கும் வீசுகின்ற தமிழின் காற்றே
இனியநறுஞ் செந்தேனே அமிழ்தின் ஊற்றே
தித்திக்கும் திருக்குறளைத் தந்த தாயே!
தீந்தமிழே! வணங்குகிறேன் வாழ்க நீயே;

முடியரசர் மூவேந்தர் மடித வழ்ந்து
முச்சங்கம் வளர்ந்திட்ட தமிழே! தாயே!
கொடிமலராம் மல்லிகையின் மணத்தைப் போலே,
குவலயத்தில் உன்புகழைப் பரவச் செய்வேன்.

பொடிவைத்துப் பேசிடுவார் அங்கும்! இங்கும்!
பொற்றமிழே! உன் வளர்ச்சி கண்டே, இந்தி
வெடிவைத்து அழிப்பதற்கே எண்ணு கின்றார்.
வேங்கையின்முன் சிற்றெலிகள் என்ன செய்யும்?

மழைத்துளியால் மலையென்ன கரைந்தா போகும்?
மரநிழலால் மதியொளிதான் மறைந்தா போகும்
தழைத்துவளர் தண்டமிழே! உன்றன் ஏற்றம்
தரங்கெட்ட சிலராலே அழிந்தா போகும்?

சொத்தென்றும் சுகமென்றும் பாரேன்; உன்னைச்
சூழ்ந்திருக்கும் இருள்போக்கல் எனது வேலை!
பத்தோடு பதினொன்றாய் வாழேன்; ஆவி
பறித்தாலும் கவலைகொளேன்; காப்பேன் உன்னை!

—ஆ. சோசப்.

ஒரு செய்தி - இரண்டு ஏடுகள்?......

தமிழகத்தில் வைத்தியக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள் என்பதும், அது பல மாணவர்களால் ஆட்சேபணை செய்யப்பட்டு நீதிமன்றத்தில் "ரிட்" போடப்பட்டதும் ஒரு செய்தி!

இதுபற்றி இரண்டு ஏடுகளில் வந்த செய்தித் தலைப்பு இது!

வைத்தியக் கல்லூரி அட்மிஷன் ஆட்சேப மனுக்கள் தள்ளுபடி

—தினமணி.

மாணவர்களை வகுப்பில் சேர்க்க அரசுக்கு ஐகோர்ட் உத்திரவு

—நவசக்தி.

ரிட் மனுக்கள் 200. நீதிமன்றத் தீர்ப்பு இரண்டு பேரது மனுவை மறுபரிசீலனை செய்யலாம் என்று. மற்ற மனுக்கள் யாவும் தள்ளுபடி செய்யப்பட்டு, தேர்வு முறைப்படியே நடைபெற்று இருப்பதாகத் தீர்ப்பு!

அரசியல் புரிகிறதா? ஆசையும் புரிகிறதா?

இந்த யோக்யர்கள்தான் மாநகராட்சியைப் பிடிக்கப் போகிறார்களாம்!

அயர்லாந்தின் அணையா விளக்கு

"நீங்கள் நிகழ் காலத்தை மட்டுமே கவனிக்கிறீர்கள். இறந்த காலத்தையும், வருங்காலத்தையும் சற்றே நினைந்து பாருங்கள். உலக மக்கள் பல கொடுமைகளைத் தாங்கிக்கொண்டே பெருகி வருகின்றார்கள். ஆனால் அவர்களைக் கொடுமைப் படுத்திய ஏகாதிபத்தியங்கள் அழிந்தொழிந்து போன சுவடே தெரியவில்லை. எங்கே அந்த சரிந்துவிட்ட சர்வாதிகாரிகள்" இப்படித்தான் முழங்கினார் அயர்லாந்தின் இருள் நீக்க எழுந்த விடுதலைக் கதிரவன் "டெரென்ஸ் மாக்ஸ்வினி".

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடிமைத் தளையைக் களைந்தெறிய வேண்டுமென்ற தணியாத ஆவல் கொண்டிருந்தார் மாக்ஸ்வினி. எனினும் அவருடைய திறமையில் தூய்மை மிளிர்ந்தது. "விடுதலைப் பெறுவது பெருஞ்செயலல்ல; அதனை நேர்மையான முறையில் பெறுவதே சிறப்புடையது" என விடுதலை வீரர்களிடையே கட்டுக்கோப்பை உருவாக்கினார். "எங்கள் போராட்டத்தில் பகைமையோ, பழிவாங்கும் குணமோ இல்லை; சகிப்புத்தன்மைத்தான் எங்கள் கேடயம்" என முழங்கிய அரசியல் விவேகி டெரென்ஸ் மாக்ஸ்வினி. ஏழ்மையும் வறுமையும் தேளாகக் கொட்டிய குடும்பத்தில் பிறந்தார். பள்ளிப்படிப்பைக் குறைவாகவே பெற்றார். தொழிலாளியானார், அதன் பின்னும் தொடர்ந்து படித்தார், பல்கலைக்கழகத் தேர்வில் கலந்து பட்டதாரியானார்.

பல்கலைக்கழகப் பட்டதாரியான மாக்ஸ்வினி, பாக்கள் இயற்றும் பாவலரும் ஆனார். தியாகத்தின் தனிப் பெருமைகளைக் கவிதைகளில் தவழவிட்டார். விடுதலை உணர்வைத் தூண்டும் வகையில் கட்டுரைகள் எழுதினார். மனித வாழ்வின் இன்ப துன்பங்களை மையமாக வைத்துக்கொண்டு சுவையான நாடகங்கள் எழுதினார் அவருடைய நாடகங்களும், கவிதைகளும் மக்கள் மனதில் நிலையான இடத்தைப் பெற்றன. அவர் எதிர் பார்த்த தெளிவை, அவருடைய எழுத்துகள் ஏற்படுத்தித் தந்தன.

ஆங்கில ஏகாதிபத்திய வெறியர்களால் அயரிஷ் தேசிய மொழியான "கெயிலிக்" மொழி நசுக்கப்பட்டது. தாய்மொழி தாழ்த்தப்படுவதைத் தாங்கிக்கொள்ளாத மாக்ஸ்வினி, மக்களிடையே மொழி உணர்வை உருவாக்க "கெயிலிக் இலக்கிய சங்கம், எனும் கழகத்தை உருவாக்கினார்" ஒருநாட்டின் அடிமைத்தனம் அகலாமல் இருக்க அந்நிய மொழியின் ஆதிக்கமே, காரணம் என் பதை மக்களிடம் விளக்கி, மங்கியிருந்த மொழி உணர்வைத் தூண்டிவிட்டார். அயரிஷ் மொழியின் பண்டைய சிறப்பு. அன்றைய அவலநிலை, எதிர்கால நிலை ஆகிய திறனாய்வுகள் செய்து நாட்டு மக்களுக்கு மொழிப் பற்றை ஊட்டினார்.

மாக்ஸ்வினி அவர்கள் தன் வாழ்வின் சுவை மிகுந்த நாட்கள் சிறைகூடத்திலேயே கழித்தார். சிறைகூடத்தில் தான் மாக்ஸ்வினியின் வாழ்க்கையில் புதியதோர் திருப்பம் ஏற்பட்டது. ஆம், சிறைகூடத்தில் அவருக்குப் பணிவிடை செய்த பெண்ணையே அவர் தன் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார். ஒளி புக முடியா நெடிதுயர்ந்த மதில்களுக்கிடையே அம்மணவினை நிகழ்ந்தாலும், அம்மங்கல நாள் மாக்ஸ்வினியின் மனதில் பேரின்பத்தை ஏற்படுத்தியது. காரணம் அந்தத் திருமணம், ஆங்கிலத்தில் நடைபெறுமல் அயரிஷ் தேசிய மொழியான கெயிலிக் மொழியில்நடைபெற்றதுதான்! 1917-ம் ஆண்டு ஜூன் திங்கள் 9-ஆம் நாள் நடைபெற்ற அந்தத் திருமணம் ஆங்கிலேயருக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

மாக்ஸ்வினி இல்வாழ்க்கை நடத்திய சில நாட்களுக்குள் சிறைக் கதவுகள் அவருக்காகத் திறந்துகொண்டன. பெண்மையின் இனிய கனவுகள்—ஆண்மையின் துடிக்கும் ஆசைகளை—விரைவாக ஒடுக்கிவிட்டனர் ஆங்கிலேயர்கள் — இல்வாழ்க்கையின் இனிய கனவுகள் கல் நெஞ்சர்களால் கலைக்கப்பட்டன.

1918-ஆம் ஆண்டு ஜூன் 18-ஆம் நாள் மாக்ஸ்வினி ஒரு பெண் மகவுக்குத் தந்தையானார். வாழ்க்கையின் அரும்பு பூத்த வேளையில் அதன் நலத்தைத் துய்க்க முடியாமல் சிறைகூடத்தில் இருந்தார்.

விடுதலை வாழ்வைக் கனவென்றும், ஏமாற்றும் செயல் என்றும் விமர்ச்சிப்போரை, மாக்ஸ்வினி கடுமையாகச் சாடுகின்றார். "நாட்டின் வாழ்க்கை நூற்றுண்டுக் கணக்காய் எண்ணப்படுகின்றது. குழந்தைப் பருவத்தில் ஊன்றப்படும் விதை முதுமைப் பருவத்தில் பலனளிக்கின்றது. முதுமைப் பருவம் சில ஆண்டுகளிலேயே வருவதில்லை. பல்லாண்டுகள், செல்லவேண்டும். இதை மனதில் கொள்ளவேண்டும். நம்முடைய உழைப்பு, நம்மின் வருங்காலச் சந்ததியர்க்கே இன்பம் பயக்கும். நம் வாழ்நாளிலேயே வெற்றி கிடைத்தாலும் கிடைக்கலாம். இன்றேல் நாம் மடிந்த பின்னரேனும் கிடைக்கலாம். அதற்காக வருந்தவேண்டாம், விடுதலை கொண்ட தாயகத்தை உருவகித்து இன்பம் கொள்க" என விடுதலை வீரர்களுக்கு உரமூட்டினார். விடுதலை வீரர்களின் செயல் திறத்தைக் குறிக்க வந்த அறிஞர் ஒருவர்..." முற்கால சரித்திரத்தை ஆராய்ந்து, நிகழ்கால நிலையை உணர்ந்து, வருங்கால வாழ்வை ஊடுருவி விடுதலை வீரர்கள் பணியாற்றுகின்றனர். தேசிய வீரர்களின் உழைப்பு, மலர்ந்து, மணந்து, காய்ந்து கனிந்து, குலுங்கக்கூடியது. இது ஒரே நாளில் நடவாது. அவர்களின் வாழ்வு அழகானது. நாட்டின் பல நாள் இன்பத்துக்காக அவர்கள் தங்களுடைய சில நாள் வாழ்வைத் தியாகம் செய்கிறார்கள்" என்கின்றார். அவருடைய கருத்துக்கொப்ப மாக்ஸ்வினி தன் தாய் நாட்டுக்காக தன்னையே அர்ப்பணித்தார் 1920-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12-ஆம் நாள் கைது செய்யபட்டு சிறைக்குச் சென்றார், பின் திரும்பவே இல்லை. சிறைகூடத்திலேயே தன் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துக்கொண்டார். இலண்டனில் உள்ள பிரிக்ஸ்டன் சிறையில் எழுபத்தி நான்கு நாட்கள் உண்ணா நோன்பிருந்து உடல் உருகி, உள்ளீரல் பற்றி எரிய அந்த மாவீரர் மடிந்து போனார்!

நேர்மை, அன்பு, ஒழுக்கம், கடமை கண்ணியம் என்னும் சொல்லுணர்ச்சியின் உயிர் வடிவான அந்த அரசியல் வித்தகர், அயர்லாந்தின் அணையா விளக்கு, இம் மண்ணுலகில் அணைந்து விட்டது, ஆனால் உள்ளங்களில்?......

—தோ. குப்புசாமி.

இனியொரு விதி செய்வோம்!

—மு. சு.—

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை"—என்றார் வான்புகழ் வள்ளுவர். பணம் தேடுவது ஒரு பெரிய காரியம்தான். ஆனால் அதைவிடப் பெரிய காரியம் தேடிய பணத்தினைக் காப்பாற்றிக் கொள்வது என்றான் டிஸ்ரேலி. வருமானம் என்பது உழைத்துப் பணம் அடைந்திடுவது மட்டுமல்ல — உள்ளதைக் கொண்டு நிறைவாக வாழ்ந்திடுவது என்றான் சிசரோ. "ஈட்டி எட்டின மட்டும் பாயும். பணம் பாதாளம் வரையில் பாயும்," "பணம் இல்லாதவன் பிணம்" என்று பழமொழிகள் பல கண்டவர் நம் முன்னோர்.

"வாழ்க்கை வளர வளர தேவைகளே பெருகுகின்றன — இன்பங்கள் அல்ல" என்றார் ஜான்சன். மக்கள் வளரும் வாழ்க்கையில் பெருகும் தேவைகளைப் பெற்றிட—முழுப்பயன் எய்திட பொருள் இன்றியமையாததாகும்.

அத்தகைய பொருளை உடல் வருத்தி—உழைத்து உருக்குலைந்து பலரும் — பிறரது உழைப்பை உறிஞ்சி சிலரும்—உயிரினும் இனிய மானத்தினை இழந்து சிலரும்—மற்றவரை ஏய்த்து மாய்த்து சிலரும்— இப்படிப் பலர் பலப் பல வகைகளிலே ஈட்டிடுகின்றனர் பொருளை— தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென.

பிறருடைய உழைப்பை உறிஞ்சி உண்டு கொழுத்திடுவோரும் மானத்தினை இழந்து பொருளை ஈட்டிடுவோரும்—பிறரை ஏய்த்திடும் எத்தரும்—மற்றவர் உடைமையைக் களவாடும் கயவரும் இந்த நாட்டின் காளான்கள். களைகள்—களைந்தெறியப்பட வேண்டியவர்கள். அவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை, இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் அவர்கள் உண்மையை உணர்வார்கள்.

நமக்கிருக்கும் கவலையெல்லாம் மண்மேடுகள் மாளிகைகளாகிறதே- வனங்கள் தோட்டங்களாகிறதே— பள்ளங்கள் பாதைகளாகின்றனவே- நிலத்திலே வியர்வை சொட்டச் சொட்ட—சிந்தச் சிந்த—உருக்குலைய உழைத்திடும் பாட்டாளித் தோழனால்! அவனைப் பற்றித்தான்!

அவன் இந்த நாட்டின் அரண். ஒரு நாட்டிற்கு அரணாக விளங்கிடும் அரண் மிக்கதோர் வலிவினைப் பெற்றிடுதல் வேண்டும்—பெற்றிருத்தல் வேண்டும். அதுபோல, இந்த நாட்டின் அரண் என்று அழைக்கப்படுகின்ற பாட்டாளி, உழவர் பெருமக்கள் தக்கதோர் வலிவினையும்—பொலிவினையும் பெற்றிருத்தல் வேண்டும். அத்தகைய வலிவினையும் — பொலிவினையும் தரத்தக்கச் சாதனங்களுள் — செயல் முறைகளுள் "சிறுசேமிப்புத் திட்டம்" என்ற ஒன்று ஆகும்.

'சிறுதுளி பெருவெள்ளம்' என்றார்போல சிறுகச் சிறுக சேமித்திடும் பொருள் பெரும்பயனை அடைந்திட வழிகோலலாயிற்று. இப்படிச் சேர்த்திடும் பொருள் 'ஒரே கல்லில் இரு மாங்காய்கள்' என்பதுபோல தனி மனிதனுக்கும் பயன்படுகிறது; சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்படும் திட்டங்கட்கும் பெருமளவு பயன்படுகிறது— பயன்படுத்தப்படுகிறது.

சமுதாயம் என்னும் நிலத்தின் கண் உயர்வு, தாழ்வு—செல்வம் வறுமை என்ற வகையில் மேடுபள்ளங்கள் அமைந்துள்ளன. இம்மேடு, பள்ளங்கள் சமநிலைக்குக் கொண்டு வரப்பட்டால்தான் சமுதாயப் பாதை சரிவர அமைந்த பாதையாகத் திகழ்ந்திடும். இந்நிலையினை எய்திட மக்களது வாழ்க்கைத் தரம் உயர்ந்திடல் வேண்டும்.

மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட—பாலைவனம் சோலைவனம் ஆகவேண்டும்—கனிநெல்லும் செந்நெல்லும் கவினுறவளருங் கழனிகளாகக் காட்சி நல்கிட வேண்டும். பார்க்குமிடமெங்கும் பள்ளிகள், தொழிற் கூடங்கள், ஆலைகள், கால்வாய்கள், அணைக்கட்டுகள் இவை யாவும் பெருகிடல் வேண்டும். இந்நிலை வந்திட—அடைந்திட—பெற்றிட ஆயிரக்கணக்கான—இலட்சக்கணக்கான — கோடிக்கணக்கான— ரூபாய்கள் முதலீட்டிற்குத் தேவை. முதலீடுக்குத் தேவையான பெருமளவுத் தொகையினைப் பெற்றிட சிறுசேமிப்புத் திட்டம் வழிவகை செய்திடும்.

ஒரு நாடு மாற்றார் ஒருவரால் ஆக்கிரமித்துக் கொள்ளப்படுகிறது என்றால் — கவர்ந்துகொள்ளப்படுகின்றது என்றால், அந்நாட்டிலே— இருக்கவேண்டிய இன்றியமையாதவைகளில் ஒன்றான பொருளாதார வளம்—இல்லாதிருப்பதாகும். நாடு பொருள்வளம் எய்திட பொருள் முடக்கத்தினை நீக்குவதே சிறந்த வழியாகும். அப்படிப் பொருளை உயிரோடு உலவ விடுவதன் மூலம் பொருள் துறையிலே மட்டும் அல்ல —இன்னபிற துறைகளிலும் பேரளவு நன்மையினையும்—பெருமளவு பயனையும் பெற்றிடுதல் இயலும். இதற்கு உறுதுணையாக — ஊன்றுகோலாக விளங்கிடுவது சிறுசேமிப்புத் திட்டம் ஆகும்.

'தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த செகத்தினை அழித்திடுவோம்' என்றான் பாட்டுக்கொரு புலவன் பாரதி. பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்த நம் நாட்டில் பசி, நோய், அச்சம் இவை நீங்கிடதுணை புரிவது சேமிப்பு ஆகும்.

உழைத்துப் பொருளீட்டிடும்பாட்டாளிகள் பலர் ஆனமுதலில் அதிகம் செலவழித்து—அதனால் மானம் அழிந்து மதிகெட்டு—எல்லார்க்கும் பொல்லனாய் எழுபிறப்பும் தீயனாய் நடமாடும் அவல நிலையினை மாற்ற எண்ணினார். அவனியின் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள்.

ஐயறிவு உயிரை உடைய எறும்பு உணவினை 'தனக்கு மழைக்காலத்திற்கென சேமித்து வைக்கும்போது —பிறர் முயற்சியால் விளைந்ததைக் களவாடும் எலியும் சேகரித்து வைக்கும்போது—ஆறறிவு உயிர் உடைய நீங்கள் ஏன் அலைக்கழிகிறீர்கள்? என்று அவர் வினா விடுத்தார். முன்னிலும் அதிகமாக—முந்தைய அரசு காட்டிய உற்சாகத்தில் பன்மடங்கு தீவிரம் காட்டினார். சிறு சேமிப்புத் திட்டத்திற்கு ஊக்கமும் உறுதியும், ஆக்கமும் ஆதரவும் அளித்தார்—அளித்தும் வருகிறார்—அளித்தும் வருவார் அந்த பாட்டாளித் தோழர்! தொட்டிற் பழக்கம்சுடுகாடு மட்டும் என்பது பழமொழி. எனவே இளந்துளிர்விட்டு வளர்ந்துகொண்டிருக்கின்ற — ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கப் போகின்ற— இளைஞர் சமுதாயம், சிறு சேமிப்பினைத் துவங்கி நாட்டின் நலிவினை நீக்கிட துணைபுரிவோம் என்றதோர் விதி செய்து அதனை எந்நாளும் காப்போம் என்று செயல்படுவதொன்றுதான் எதிர்காலத்தைக் காக்கக்கூடியதாகும்!

அவர்களாவது வாழட்டுமே

எம். முருகன்

அந்த அறையினுள் மீண்டும் பார்வையை ஓடவிட்ட சுப்பையாவின் இதயம் சினத்தால் குமுறிக்கொண்டிருந்தது. கட்டிலின் ஒரு மூலையில் உட்கார்ந்து விம்மி அழுதுகொண்டிருந்த அவருடைய மகள் மனோகரியையும், கன்னத்தில் கைகளைப் பதித்தபடி அதே கட்டிலின் மற்றொரு மூலையில் உட்கார்ந்திருந்த பாபுவையும் பார்க்கப் பார்க்க அவருடைய ஆத்திரம் மேலும் அதிகமாகியது. ஓடிப்போய் அப்படியே அவர்களிருவரையும் மென்னியைப் பிடித்து நெரித்துக் கொன்றுவிடலாமாவென அவர் எண்ணினார். படாத பாடுபட்டுத் தனது சீற்றத்தை மறைத்துக்கொண்டு கேட்டார். "மனோகரி, நீ என்னோட வரப்போறியா, இல்லியா?" அவள் அவரை ஏறிட்டுப் பார்த்தாள். "அப்பா, பாபு இல்லாமல் என்னால் ஒரு நிமிஷங்கூட வாழ முடியாது. என்னை மன்னிச்சுடுங்க!" அவருடைய குரலில் கோபம் பொங்கியது. "அப்படியா? பெற்ற அப்பனோட மானம் மரியாதையைவிட இந்த வேற்றுச்சாதிப் பயல் உனக்குப் பெரிசாப் போயிட்டான் இல்லே, இருக்கட்டும், அதோட எல்லாமே முடிஞ்சாப்பலதான்! ஆனா ஒண்ணு. இனிமே என்னை நீ உயிரோட பார்க்கமுடியாது. நம்ம ஊரிலே தலைகாட்ட முடியாம செய்துட்டே நீ! இனிமே நான் உனக்கு அப்பனுமில்லே, நீ மகளுமில்லே!" அவர் விடுவிடுவென்று மாடியை விட்டுக் கீழே இறங்கினார். அவர் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த அந்த மூட்டைப்பூச்சி மருந்துப் பொட்டலம் அவருடைய மடியில் பத்திரமாக இருந்தது.

மனோகரி அவருடைய ஒரே மகள். அவளைப் பெற்றுப்போட்ட அன்றே அவளுடைய தாய் இறந்துவிட்டாள். சுப்பையா மகளைக் கண்ணுங்கருத்துமாக வளர்த்தார். கல்லூரியில்கூடப் படிக்க வைத்தார். ஆனால் அவள் தன்னோடு படிக்கும் பாபு என்பவனோடு பழக ஆரம்பித்துவிட்டாள். அதையறிந்த உடனே அவளுக்கு மாப்பிள்ளை தேடத் தொடங்கினார் அவர். அவ்வளவுதான், மனோகரி வீட்டைவிட்டே கிளம்பிவிட்டாள். அவளும் பாபுவும் திருச்சியில் இருப்பதாக யாரோ சொன்னார்கள். மானமே போய்விட்டதென்று வீட்டிலேயே அடைந்துகிடந்த சுப்பையா, மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, திருச்சிக்குப் புறப்பட்டார். அவர்களை ஒரு லாட்ஜில் கண்டு, மனோகரியைத் தன்னோடு புறப்பட்டு வருமாறு எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். தன் மகளின் வாழ்க்கையில் குறுக்கிட வேண்டாமென்று பாபுவிடம் எடுத்துக் கூறினார். மிரட்டிப் பார்த்தார். அவன் அதற்கெல்லாம் அசையாதிருக்கவே அவளிடங்கெஞ்சினார். ஆனால் அதனாலெல்லாம் எவ்விதபயனும் விளையவில்லை. மனோகரியும் அவரோடு கண்ணீர்விட்டு அழுததென்னவோ சரிதான், ஆனால் காதலே பெரிதென்றும் பாபுவோடுதான் தன்னால் வாழ முடியுமென்றும் இல்லையேல் காலமெல்லாம் கன்னியாகவே இருந்துவிடத் தான் தீர்மானித்துவிட்டதாகவும் அவள் சொன்னது அவருக்குச் சரியென்று படவில்லை. முட்டாள் பெண்! காதலாம், கத்திரிக்காயாம், கதைக்கிறாள்! அவர்கூடத்தான் காதலித்திருக்கிறார். அதற்காக, இப்படியெல்லாமா பெற்றோரைவிட்டு ஓடிவந்திருக்கிறார்? ச்சீ!

வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. ஆறாகப் பெருகும் வியர்வையைக் கூடத் துடைத்துக்கொள்ள வேண்டுமே என்னும் உணர்வில்லாமல் அவர் மேலப்புலிவார்டு ரோட்டில் நடந்து வந்துகொண்டிருந்தார். மடியில் வைத்திருக்கும் அந்த மருந்துப் பொட்டலம் பத்திரமாக இருக்கிறதா என்று ஒருமுறை தொட்டுப் பார்த்துக்கொண்டார்.

அவர் தீர்மானித்து விட்டார், மானமே போய்விட்ட பிறகு உயிர் வாழ்வது ஈனமான செயலென்று. இனி அவருக்கு நிம்மதி. முன்னே விட்டுப் பின்னால் சிரிக்கும் மனித மிருகங்களின் விகாரமான சிரிப்போசை காதுகளில் விழாத உலகத்திற்கு அவர் சென்றுவிடுவார்.

அவர் காதலுக்கு விரோதியல்ல. ஆனால் சாதிமத வேறுபாடுகளை மதிப்பவர், தாம் உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர் என எண்ணுவதில் மகிழ்ச்சியடைபவர், பழமையில் ஆழ்ந்த பற்றுடையவர். ஆனால், மிகவும் நல்ல மனிதர், அன்பான மனங்கொண்டவர். யாரையும் குறை சொல்லமாட்டார். மானம் உயிர். அவர்கூட — ஆமாம் சுப்பையாதான் — ஒரு காலத்தில் ஒரு கிறித்துவப் பெண்ணைக் காதலித்தார்!

தனக்கெதிரே கிறித்துவ மதப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டு வரும் அந்தப் பெண்ணைக் கண்டதும் அவர் திடுக்கிட்டு அப்படியே நின்றுவிட்டார். அவளுக்கு சுமார் நாற்பது வயதிருக்கும். அவளுடைய உடலமைப்பு ஒரு காலத்தில் அவள் பேரழகியாக விளங்கியவள் என்பதை நினைவுபடுத்திக்கொண்டிருந்தது. அந்த வயதிலும் அவளிடம் அப்படியொரு கவர்ச்சி.

நடுச்சாலையில் ஒருவர் தன்னை வெறித்துப் பார்த்துக்கொண்டு நிற்பதைக் கண்டு, ஒரு கணம் அவள் நாணினாள். ஆனால் உடனே சமாளித்துக்கொண்டாள். "நீங்களா?... உண்மையில் நீங்கள்தானா? என்னைத் தெரிந்து கொண்டீர்களா?" அவர் புன்னகைத்தார். "நீ இங்கேதானிருக்கிறாயா? அடேயப்பா! எவ்வளவோ மாறிப்போய் விட்டாயே!"

"ஆமாம், வாங்க, அந்த ஓட்டலில் போய்ப் பேசலாம். ஒரே வெயிலாயிருக்கு." அவர் அவளோடு கிளம்பினார். அவருடைய மனம் கடந்த கால நினைவுச்சுழலில் சிக்கிச் சுழன்றது.

அப்போது அவர் இதே திருச்சியில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். ஹேமலதா சிறுவயது முதலே அவருடைய பள்ளித் தோழி. கல்லூரி நாட்களில் அவர்களிடையே காதல் முகிழ்த்தது. அவளோடு கல்லணை, காவிரிக்கரை, உச்சிப் பிள்ளையார் கோயில் என்



மாநகராட்சித் தேர்தல்:

மறந்துவிடாதீர்கள்!

சென்னை குடிநீர்ப் பிரச்னை—எத்தனை ஆண்டுக் காலமாக எழுப்பப்பட்டு வந்திருக்கிறது?

கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், இதுபற்றி டில்லியிடம் கேட்டபோது,

"சென்னை அரசு இதுபற்றிக் கோரிக்கை எதுவும் அனுப்பவில்லை"

என்றல்லவா அன்று பதில் சொல்லப்பட்டது டில்லியிலிருந்து!

அறிஞர் அண்ணாவின் தமிழக அரசு, இதற்கான கோரிக்கையை முறையாக அனுப்பி இருந்தும் சுப்பிரமணியம் மட்டும் ஏன் அதனை மறைக்கிறார்? எதையும் மூடி மறைத்துத் திரித்துப் பேசியே பழக்கம்! இன்றைக்கு மட்டும் மாறிவிடுமா? மாறாதையா, மாறாது!

தங்கள் மீது எழுப்பப்பட்ட குற்றச்சாட்டை கழகத்தின் மீது சுமத்திப் பார்க்கிறார்!

பாவம் சுப்பிரமணியம்!

பாவம் காங்கிரஸ்!!

மாநகராட்சித் தேர்தல்:

ஆசையின் அரிப்பு

சுதந்திர மடைந்த காலத்துக்கு முன்பிருந்தே 1958 வரையில் சென்னை மாநகரம் காங்கிரஸ் கையில் இருந்தது. ரூபாய்க்கு ரூபாய் அப்போது ஏன் செலவு செய்யவில்லை?

செலவு செய்ய முடியவில்லையா?

மன மில்லையா?

கழகம் பொய்யானவாக்குறுதிகள் தந்திருப்பதாகக் கூறி வந்த காங்கிரசுத்தலைவர் இப்போது கூறி இருப்பது என்ன?

பொய்! பொய்!! பொய்!!!

வரி வருவாயிலிருந்துதான் நிருவாகச் செலவு செய்தாக வேண்டும்! டில்லியா கொடுக்கப்போகிறது? கொடுக்குமா அது?

'ஆட்சியை இழந்தோம்! அந்தஸ்தை இழந்தோம்!! மாநகர ஆட்சியையாவது பிடிக்க முடியாதா' என்ற அங்கலாய்ப்பு — ஆசையின் அரிப்பு!! அல்லாமல் வேறென்ன?

றெல்லாம் சுற்றித் திரிந்தார். அவர்களுடைய காதல், அவர்களுடைய வீட்டாருக்குத்தெரியவந்தது. ஹேமலதாவின் தாய் சுப்பையாவுக்குப் பெண்ணைக் கொடுக்க விரும்பினாலும், அவளுடைய தந்தை அதை விரும்பவில்லை. சுப்பையாவின் வீட்டிலோவென்றால், வீரசைவர்களான அப்பாவும் அம்மாவும் கிறித்துவப பெண்ணான லதாவை மட்டுமின்றி, அந்த மதத்தையே வெறுத்தார்கள், இப்படி சாதி மத வேறுபாடுகளிடையில் தனது பெற்றோர்களைப் பகைத்துக்கொள்ள சுப்பையா விரும்பவில்லை. தகப்பனார் சொற்படிசொந்தத்தில்ஒருபெண்ணை மணந்துகொண்டார். ஆனால்ஹேமா?

அவர் தன்னுடைய கடந்த காலத்தின் வாழ்க்கை அனுபவங்களைப் பற்றியும், மனோகரியைத் தேடிக் கொண்டு திருச்சிக்கு வந்து அவளைப் பாபுவோடு லாட்ஜில் பார்த்ததையுங் கூறிவிட்டு, இப்படிச் சொன்னார். "மனோகரி கடைசியில் என்னைப் பழிவாங்கி விட்டாள் அந்த வேற்று சாதிக்காரனோடு ஓடிப் போய்..." அவள் குறுக்கிட்டாள். "என்னங்க இது? இன்னுமா அந்த அர்த்தமற்ற சாதிப் பிரிவுகளையெல்லாம் நம்புகிறீர்கள்? அன்புதாங்க முக்கியம். அந்த அன்பின் வலிமையால்தான் நான் இதோ இன்னும் கன்னியாகவே இருக்கிறேன். உங்களை மணக்கமுடியாமல் போனதற்கப்புறம் எனக்கு மண வாழ்க்கையே வெறுத்துப் போச்சுங்க. இபபோதும் நான் கன்னிப் பெண்தான். ஏதோ கிறித்துவ மதப் பிரசாரம் செய்து கொண்டு..." அப்படியா? நீ வேறு யாரையுமே மணந்துகொள்ளவில்லையா? என்ன காரியம் செய்து விட்டாய் லதா!" "அது போகட்டுங்க. மனோகரியும் பாபுவும் சேர்ந்து வாழவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்க...அவர்களாவது மனம் போல வாழட்டும்." சுப்பையா நீண்ட நேரம் சிந்தனையிலாழ்ந்து உட்கார்ந்திருந்தார். பிறகு சொன்னார். "ஆமாம் லதா! அன்புதான் முக்கியம். சாதியாவது மண்ணாவது! வேற்று சாதிப் பெண்ணான நீ என் பொருட்டுக் கன்னியாகவே வாழ்நாளெல்லாம் இருக்கும்போது நான் மட்டும் மணஞ் செய்துகொண்டு வாழ்ந்திருக்கிறேனே — என்ன கொடுமை! போகட்டும். மனோகரியாவது வாழட்டும். வா போகலாம்!" அவர்கள் ஓட்டலிலிருந்து வெளியே வந்தார்கள். அவர் மடியிலிருந்த மருந்துப் பொட்டலம் குப்பைத் தொட்டியில் போய் விழுந்தது.

21.10.68

அண்ணனுக்குப் பரிசு

—புலவர். பொன்னிவளவன்

மின்னலைப்போல் காங்கிரசார் தேர்தல் நேரம்
மின்னிடுவர்; மறைந்திடுவர்! அவர்கொடுக்கும்
இன்னலிலும் இழிநிலைநாம் போக்குகின்றோம்!
எண்ண அலை இதயத்தில் எழுந்து துள்ளக்
கன்னலைப்போல் தித்திக்கப் பேசுகின்ற
கழகத்துத் தோழர்களே! நமக்குக் காந்தி
அண்ணலைப்போல் வாய்த்திருக்கும் அண்ணா நெஞ்சில்
ஆனந்தத் தேன்பாய்ச்ச எழுந்து வாரீர்!

கட்டிவைத்த பூச்சரமா வெற்றி? இல்லை!
கடும்உழைப்புப் பெறுகின்ற பரிசு! தட்டில்
வெட்டிவைத்த செங்கரும்புத் துண்டா வெற்றி?
விழிப்புணர்ச்சி, செயல்திறமை, மக்கள் காதில்
கொட்டிவைத்த நம்கொள்கை முழக்கம் நம்முன்
குவிக்கின்ற காணிக்கை! தேர்தல் தன்னில்
தட்டிவைப்போம்! சுவரொட்டி ஒட்டி வைப்போம்!
தகுந்தபடி வெற்றியில்நம் நினைவை வைப்போம்!

கண்ணனுக்குப் பிடித்தபொருள் வெண்ணெய் என்பர்!
காங்கிரசைப் பிடித்ததுவோ பதவி ஆசை!
மன்னனுக்குப் பிடித்ததுவோ புலவர் பாட்டு!
மங்கையர்க்குப் பிடிப்பதுவோ புதிய சேலை!
முன்னேற்றக் கழகத்தார் நமக்கோ அண்ணா
முத்தமிழ்வாய் நமைப்புகழ்ந்தால் மிகப்பிடிக்கும்!
அண்ணனுக்குப் பிடித்ததெது? கழக வெற்றி!
அதை அடைய உழைத்திடுவோம்! விரைந்து வாரீர்!

சென்னைமா நகராட்சி நமக்குச் சொந்தம்!
சீரழிந்த காங்கிரசின் நிலையோ மந்தம்!
உன்னை என்னைப் பார்க்கின்ற வெளியூர் மக்கள்
ஓயாமல் வினவுகின்றார் நிலைமை பற்றி!
பொன்னல்ல; வாடும்பூ மாலையல்ல;
பொருளல்ல நம்நெஞ்சில் நிலைத்து நிற்கும்
அண்ணனுக்குத் தரும்பரிசு வெற்றி! வெற்றி!
அதைப்பெறுவோம்! புகழ்பெறுவோம்!
உழைப்போம்! வெல்வோம்!

மருதம்

—புலவர். மா. சொக்கலிங்கம்.

சேறுமணக்கும் வயல்க ளெல்லாம்;
செஞ்சாலி மணக்கும் வரப்பெல்லாம்;
சாறுமணக்கும் பொழில்க ளெல்லாம்;
தேந்தாது மணக்கும் காற்றெல்லாம்;
சோறுமணக்கும் மடைக ளெல்லாம்;
நல்தேர்கள் மணக்கும் வீதியெல்லாம்;
தாறுமணக்கும் தென்னை யெல்லாம்;
தண்கயல்கள் மணக்கும் குளங்களெல்லாம்.

கோடையிலே இளைப்பாறக் குளிர்ம ரங்கள்;
கோயிலிலே மனகிழக் கலைய ரங்கம்;
ஆடையிலே முத்தமிழும் முத்தமிடும்; உடுத்தும்
ஆடையிலே சித்தி ரங்கள் நத்தமிடும்;
ஓடையிலே தண்மலர்கள்; மாடியிலே கண்மலர்கள்;
ஓடிவரும் ஆறுகளில் நன்மலர்கள் பெண்மலர்கள்;
மேடையிலே பன்மலர்கள்; மெல்லியாழில் பண்மலர்கள்
மேனகையார் மேல்நகைகள் பொன்மலர்கள்;

மருதப்பெண் உன்னுடலின் பச்சைச் குத்தோ?
மண்டிநிற்கும் பயிர்வனப்பின் தோற்றம் எல்லாம்;
பெரிதாகப் பயிர்வளர்ந்து தொண்டை கட்டிப்
பின்னியுள காட்சியெலாம் பெண்ணே உந்தன்
சரியான சாபத்தின் விளைவோ தானோ,
கருவான பசும்பாம்பின் தோற்றம் அம்மா!
உரித்தான கதிர்முற்றி வளைந்த காட்சி,
இருல்எனுமீன் வளைந்துள்ள காட்சி யன்றோ?

"கதிரோன்ஒளி நிலமேனியில் சிறிதும்படா நிலையும்
சதிராம்படி செடியாமலர் தலையாடிடு கலையும்
அதிரும்படி இடியுண்டெதிர் விதிரும்முகிற் கொடியும்
கதிருங்குலை சாயுந்தலை சாயும்நிலை மாயும்,
மருதத்தினை அழகென்பது,மலரென்பது;பொழிலென்பது
கருதும்வளம் உளம்வென்றது; கலைவென்றது;
நிலையென்றது;
உருகும்மனந் தனைக்கொண்டது; "ஊர்" என்றது
காண்பாம்;
பெரிதும்நிலை உரிதாந்தலை; அரிதாஞ்சொல லதனை."

பொழிலைப் பழித்து முகிலை யழைத்து அகிலைச்
சொரிந்த குழலார்;
தழலைப் பழித்து வெயிலை யெடுத்துத் தரளம்
பதித்த உடலார்;
பழத்தைப் பழித்துப் பாலை யெடுத்துப் பாகைக்
கலந்த குரலார்;
கழையைப் பழித்துக் கன்னல் எடுத்து மழையைக்
கலந்த தோளார்.

கல்லை விடுத்துக் கலையே சமைந்த சிலையார்;
கயலைப் பழித்துக் காவி படிந்த கண்ணார்;
முல்லை விடுத்து முத்தம் பதிந்த பல்லார்;
முறுக்கந் தவிர்ந்து முறுவல் ஒளிந்த இதழார்;
'இல்லை' விடுத்து உண்டோ எனச்சொல்லு மிடையார்
இன்னல் தவிர்த்து இன்பஞ்சொரியும் உடையார்;
தொல்லை விடுத்துத் தூய்மை நடத்தும் மனத்தார்;
தூக்கங் கெடுத்துத் தாய்மை மதிக்குங் குணத்தார்

பூவென்ற மெல்விரல்கள்; பூவென்ற நற்கைகள்;
பூவென்ற மென்பாதம்: பூவென்ற மெல்லுடலம்;
பூவென்ற தண்மை; பூவென்ற நல்லழகு;
பூவென்ற மார்பம்; பூவென்ற கொப்பூழ்;
பூவென்ற பற்கள்; பூவென்ற கன்னம்;
பூவென்ற தண்முகம்; பூவென்ற மெல்லுதடு;
பூவென்ற நாக்கு; பூவென்ற மூக்கு;
பூவென்ற கண்கள்; பூவென்ற பூனவக்கே!

காதலிலே ஒன்றிவிட்ட உழவர் பெண்டிர்
கணவனிடம் விழிபோன காட்சி யோடே
ஓதுகிற பயிர்நடவைச் செய்யும் போது.
ஒளிர்கின்ற நிழற்கண்கள் கயல்கள் என்றும்
பாதியிலே நனைந்திட்ட கால்கள் கெண்டைப்
பருமீன்கள் தானென்றும் தவறாய் எண்ணிக்
காதுற்ற பேராசை அலையாய் ஓடிக்
கால்தடவிக் கைமாறி அயர்வார் பல்லோர்;

ஓடையிலே நீராட உவந்தே பெண்கள்
ஓடிவர, தாமரைமேல் தாமரைபோல் கண்கள்
ஆடிடவே கூடிநிற்கும் அழகின் தோற்றம்
அத்தனையும் தாமரையாய்த் தோற்றி நிற்கும்;
நாடிடுநல் கால்களெலாம் அடியிற் பூக்கள்;
நவிலுகின்ற மார்பகங்கள் நடுவிற் பூக்கள்;
கூடுகின்ற கைகளெலாம் நீர்மேல் பூக்கள்;
குறையில்லா முகமனைத்தும் பேசும் பூக்கள்;

சோலையிலே மலர்ந்திட்ட பூக்கள் எல்லாம்
சொரிந்திட்ட தேனாறு வாய்க்கால் தேங்கி
ஆலையிலே உடைந்திட்ட கரும்பின் சாறு
அலையூர்ந்து அத்துடனே கலந்து ஓடி
சாலையிலே மேய்ந்துவருங் கறவைக் கூட்டம்
சடுதியிலே ஓடிவரப் பாலும் சிந்திக்
காலையிலே மடைமாற்ற வயலில் பாய்ந்து
கழனியெலாம் தேன்மணந்து காய்க்கும் செந்நெல்,

வானத்தில் இடைபோல், மின்னல்;
வளர்கூந்தல் பொழிலின் தோற்றம்;
கானுறு குயிலே, பேச்சு
குளங்களில் குவளை, கண்கள்;
தேனுறு மலரே, முகமும்;
திரண்டதா மரைகள், நெஞ்சம்;
வானுறு பயிரே, மேனி;
மருதமே மங்கை தோற்றம்!

வயல்களே வயிற்றைச் சொல்லும்; வரால்மீன்கள்
கால்கள் சொல்லும்;
வயலல்லி இதழைச் சொல்லும்; வரைச்சங்கம்
கழுத்தைச் சொல்லும்;
பெயல்செய்யும் மழையே, ஆடை பெரிதாகச்
சொல்லி நிற்கும்;
மயல்செய்யும் ஆற்றின் சுழியே மதிப்பூட்டும்
கொப்பூழ் சொல்லும்."

ஆறுகள் ஓடும் போது அடித்துச்செல் மலர்கள்
எல்லாம்
சேரவே திட்டில் சேர்க்கும்; தினந்தினம் மணியும்
முத்தும்
நேரிதாய்க் கொண்டு சேர்க்கும் நீலமாய்க் கரைதான்
ஆக்கும்;
சாரவே பார்க்குங் காலைச் சரியான மணப்பெண்
போலாம்"

நீண்டிருக்கும் மலைப்பாம்பே வரப்பின் தோற்றம்;
நிலைத்திருக்கும் பல்போலக் கலப்பைப் பாங்கு;
ஈண்டமைந்த சேறெல்லாம் நஞ்சைக் காட்டும்;
ஏரோட்டும் உழவனுடல் பாம்புச் சட்டை;
தோன்றுகின்ற படைச்சாலோ உழவன் தோலில்
தொத்திநிற்கும் சுருக்கங்கள் எனலாம்! உண்மை;
மாண்டிருக்க வேண்டியவித் தோற்றம் போனால்
மருதத்தின் மலரும் அழகனைத்தும் அன்றோ?

(திருக்கழுக்குன்றம் முத்தமிழ் இலக்கிய
மன்றக் கவியரங்கில் பாடப்பட்டது)

காங்கிரஸ்

ஒரு அனைத்திந்திய கட்சியா?

எஸ். ஆர்.

தேசம் — தேசீயம் — தேசீய மொழி ஆகிய மூன்றினையும் பற்றி விவாதிப்பது எவ்வாறு பிரச்சனைகளில் முடியுமோ அதுபோல அனைத்திந்திய கட்சி என்ற இலக்கணம் காங்கிரசுக்குப் பொருந்துமா என்று கேட்பதும், பதில் சொல்லக் கடமைப் பட்டவர்களிடமிருந்து கோபக்கணைகளைத் தோற்றுவிக்கவே செய்யும்.

அரசியல், மொழி, மற்றைய சில அவ்வப்போது எழும் நிலைமைகளை வைத்து தேசம்—தேசீயம்—தேசீய மொழி பற்றிக்கருத்துக்களை வெளியிடுவது இந்தியாவின் ஒற்றுமையில் நம்பிக்கை இல்லா தன்மையாகக் கருதப்படும் ஒரு பரிதாப நிலை இருக்கும்போது,

—காங்கிரஸ் ஒரு அனைத்திந்தியக் கட்சியா? என்ற கேள்வியினையும் தெரிந்தும் தெரியாமலும் திரித்துப் பொருள்கொண்டு தவருன நோக்கம் கொண்டதென சிலர் ஒதுக்கினுலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

தேசம்—தேசீயம்—தேசியமொழி ஆகிய மூன்றும் உலகம் பூருவும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமென்பதில்லை என்று கூறி விளக்கமுற்பட்டால், "அப்படியானுல் இந்தியா ஒரு நாடு இல்லையா?" என்று எப்படி அவசரப்பட்டு தவருகச் சிலர் கேட்கிருர்களோ, அதுபோல,

—இந்தியாவின் மூத்தகட்சியான காங்கிரசை ஒரு அனைத்திந்தியக்கட்சி என்று கூறமுடியுமா? என்று கேட்டு அதற்கான வாதப் பிரதிவாதங்களைத் துவக்கினுலே சிலர் 'அப்படியானுல் இந்தியாவில் உனக்கு நம்பிக்கையில்லையா?" எனத் துடிக்கின்றனர்.

இந்திய ஒற்றுமைக்கு—அல்லது—இந்தியா ஒரு நாடு என்பதற்கு காங்கிரஸ் ஒன்றுதான் பக்கபலம் கொடுக்கும் கட்சி என்ற மிகத்தவருன எண்ணத்தின் விளைவு இது.

எந்த ஒரு நாட்டின் முழுமைத் தன்மையும் அதன் எந்த ஒரு அரசியல் கட்சியையும் சார்ந்து நிற்பதில்லை.

நாடு உள்ளடக்கியதுதான் அரசியல் கட்சிகளே தவிர அரசியல் கட்சிகள் உள்ளடக்கியது 'நாடு' அல்ல.

இந்தியா ஒரு நாடு என்பதற்கு மெருகு தருவது—பலம் கொடுப்பது—இலக்கணமாகத் திகழ்வது காங்கிரஸ் கட்சிதான் என்று சொல்வதைப் போன்று அவமரியாதை வேறு எதுவும் இருக்கமுடியாது.

—இந்தியா, நாடு என்பதற்கு தங்கள் கட்சிதான் வாழும் உதாரணமாகத் திகழ்கிறது என்று கூறி சொந்தம் கொண்டாடும் காங்கிரசுக்காரர்கள் எந்த அளவு அந்த அமைப்பை ஒரு முழு அனைத்திந்திய இயக்கமாகக் கட்டிக் காத்து வருகின்றனர் என்று ஆராய்வது இந்த அடிப்படையில்தான் அவசியமாகிறது.

—காங்கிரஸ் ஒரு அனைத்திந்திய அமைப்பா? என்ற கேள்வி எழுப்பப்பட்டிருப்பது இந்த காரணத்தினையொட்டிதான்!

ஒரு குறிப்பிட்ட இலட்சியத்துக்காக—பொது நோக்கத்துக்காக நாட்டு மக்கள் அனைவரும் ஒரு கொடியின் கீழ் ஒரு தலைவனின் பின்னுல்—ஒரு கட்சியின் அணியில் ஒன்று; சேர்வது புதிதோ பொருந்தாததோ அல்ல.

காங்கிரஸ் இந்திய மக்களின் கருத்தைக் கவர்ந்தது, விடுதலைக் கொள்கை என்ற இலட்சியம்—மற்றும் அது உள்ளடக்கிய பல கொள்கைகள்—ஆகியவற்றின் மூலமாகத்தான்.

'விடுதலை' என்ற அவசியம் மட்டும் இல்லாதிருந்தால் காங்கிரஸ் இப்படி ஒரு அனைத்திந்திய தோற்றத்துக்குச் சொந்தம் கொண்டாட முடியுமா என்று கேட்பது வேடிக்கையான கற்பனை என தள்ளி ஒதுக்கப்படலாம். ஆனுல்,

—விடுதலை என்ற இலக்கினை எட்டியதும் மெள்ள மெள்ள ஆனுல் உறுதியாக அதன் அனைத்திந்தியக் குணுதிசயம் குன்றி வருவதேன்—வீழ்ந்து படுவதேன் என்ற கேள்வியினை மட்டும் அலட்சியம் செய்துவிட முடியாது.

'விடுதலை' என்ற இலட்சியத்துக்காக கட்சிக்குள்ளேயும் கட்சி வரம்புக்கு அப்பாற்பட்டு வெளியே இருந்தும் அனைத்திந்திய பின்பற்றுதலை-ஒருமித்த ஆதரவினைப் பெற்று வந்த காங்கிரஸ் கட்சி 1947-ல் அந்த அடிப்படை இலட்சியம் நிறைவேறியவுடன்—நாட்டின் நிர்வாகம் முழுமையும் ஏற்ற ஒரு அமைப்பாக இருபதாண்டுக் காலம் வாழ்ந்தும் – அனைத்திந்திய அடிப்படையை இழந்து வரும் ஒரு கட்சியாகத்தான் மாறி வருவதனைக் காண்கிருேம்.

1947-க்கு முன்னர் இருபதாண்டுகளுக்கு மேலாக ஒன்றுபட்டு நின்ற ஒரு அமைப்பு—

—ஆட்சிப் பொறுப்பேற்ற சிறப்பான சாதக நிலையிலும் ஒரு அனைத்திந்தியக் கட்சி என்ற அந்தஸ்தினைக் கட்டிக் காக்க முடியாமல் இருப்பதேன்?

இந்தியாவின் அமைப்பு காரணமா? அல்லது காங்கிரசின் குறைபாடுதான் காரணமா?

இரண்டுமே காரணங்கள்தான் என்று கூறி அதற்கான ஆதாரங்களைக் கூறும்போதுதான் காங்கிரசுக்காரர்கள் தங்கள் அமைப்பின் குறைபாடு தெரியாமலிருக்க, கேட்பவர்கள்மீது "அப்படியானால் இந்தியாவின்மீது நம்பிக்கை இல்லையா" எனக் கேட்டு திசை திருப்பும் திறமையில் இறங்குகின்றனர்.

இந்தியாவில், காங்கிரஸ் மட்டுமல்ல; காங்கிரஸ் உள்ளிட்ட கம்யூனிஸ்ட், சுதந்திரா, ஜனசங்கம், சோஷலிஸ்ட் ஆகிய பல்வேறு கட்சிகள்கூட அனைத்திந்திய வலிமையோ ஆதரவோ இன்றிதான் இருக்கின்றன.

ஆனால் அவைகளில் ஏதும் இந்தியா ஒன்று என்பதற்குத் தங்கள் கட்சிதான் ஆதாரம் என்ற பாணியில் விவாதத்தில் இறங்குவதில்லை.

—காங்கிரஸ் ஒன்றுதான் தன்னிடம் இல்லாத அனைத்திந்தியத் தன்மையினை மறைக்க இந்திய ஒற்றுமை என்ற போர்வையினுள் மறைகிறது.

இந்திய சுதந்திரம் என்பது 1947 வரையிலும் அனைத்திந்திய நிர்வாகம் என்பது 1967 வரையிலும் காங்கிரசுக் கட்சிக்குத் தேசியப் பின்னணி கொடுத்துக் கொண்டிருந்தது.

காந்தியாரும் நேருவும் அந்த இரண்டு பின்னணிகளுக்கும் தலைமை வகித்து வந்தனர்.

"தலைமை வகித்ததில்கூட காந்தியடிகளுக்கு இருந்த "சாதகநிலை" அவரது வாரிசாக வந்த நேருவுக்குக் கிடைக்கவில்லை வெள்ளமெனத் திரண்டு வந்த ஆதரவுக்கு—பக்கபலத்துக்குத் தலைமை வகித்தார் காந்தியடிகள். ஆனால் நேருவுக்கோ அந்த சாதக நிலை இல்லை. 1947 வரையில் இருந்ததை சிந்தாமல்-சிதையாமல் கட்டிக்காக்கவேண்டிய பொறுப்பு வந்தது.

காங்கிரஸ் விடுதலை இயக்கமாக இருந்தபோதும் பின்னால் நிர்வாகத்துக்கு வந்த நிலையிலும் எத்தனையோ நூற்றுக்கணக்கான தலைவர்களைக் கண்டிருக்கிறது. ஆனால் அவர்களில் இந்தியா அறிந்த தலைவர்களாக—ஒவ்வொரு குடிமகனும் தெரிந்த தலைவர்களாக—இருந்தது காந்தியும் நேருவும் மட்டுமே.

காந்தியடிகள் இதற்காகத்தான் 1947-க்குப் பின் ஆட்சியைக் கலைத்துவிடலாம் எனக் கூறினாரோ என்று ஒவ்வொரு கட்டத்திலும் எண்ணு மளவுக்குத் தேசியக் கொள்கைகளைப் பற்றி எண்ணுவதில்—உருவாக்குவதில்—செயல்படுத்துவதில் நேருவின் தலைமையிலமைந்த நிர்வாகமும் அவரது கண்காணிப்பிலிருந்த கட்சியும் திணறியிருக்கிறது—தடுமாறியிருக்கிறது — பிளவுபட்டு நின்றிருக்கிறது—எதிர்முகாம்களாக வேறுபட்டு இயங்கியிருக்கிறது!

மொழி
பொருளாதாரம்
சமுதாயக் கொள்கைகள்

ஆகியவை உள்ளடக்கிய எந்த ஒரு பிரச்சனையிலும் காங்கிரஸ், கட்சி அமைப்பிலோ—நிர்வாக இயந்திரத்திலோ ஒருமித்தக் கருத்தினை இன்றுவரை காட்டியதில்லை. காட்ட முயன்றிருக்கிறது; ஆனால் தோற்றிருக்கிறது என வேண்டுமானால் மனச் சாந்திக்காகக் கூறிக் கொள்ளலாம்.

ஆவடி
புவனேசுவரம்

மாநகராட்சித் தேர்தல்:

நினைவிருக்க வேண்டும்—ஏன்?

தமிழகக் காங்கிரசுத் தலைவர், மாநகராட்சியைக் காங்கிரஸ் கைப்பற்றினால், ரூபாய்க்கு ரூபாய் என முழுத் தொகையையும் மக்களுக்கே செலவிடும் என்று வாக்குறுதி தந்திருக்கிறார்!

சில ஆண்டுகளுக்கு முன் கழக மாநகராட்சி உறுப்பினர் சிட்டிபாபு அவர்களால் வெளியிடப் பெற்ற—

"ரிப்பன் மாளிகை மர்மங்கள்"

என்ற புத்தகம் உங்களிடமிருக்கிறதா? இருந்தால் புரட்டிப் பாருங்கள்!

ரூபாய்க்கு ரூபாய் செலவிடும் யோக்கியர்கள் செலவிட்ட வழியும், சேர்த்துக்கொண்டவழியும் தெரியும்!

நாக்பூர்

என்ற அக்கட்சியின் வரலாற்றில் முக்கிய நேரங்களைக் காட்டும் ஒவ்வொரு மாநாட்டின் நடவடிக்கைகளைக் கவனித்தவர்களுக்கு அங்கே தேசியக் கொள்கைகள் பலவற்றின்மீது நடந்த பலப் பரீட்சையும் விஷப் பரீட்சையும் பரிதாபகரமான முறையில் வெளிப்பட்டிருக்கும்.

காங்கிரசின் இப்போதைய சரிவு 1967 பொதுத் தேர்தலில்தான் என்பது மேம்போக்கான உண்மை.

காங்கிரசின் தோல்வி முதலில் கட்சி அளவில் எப்போதோ தோன்றிவிட்டது.

தனக்குள்ளாகவே தோற்ற பின்னர்தான் காங்கிரஸ் தேர்தலில் தோற்க ஆரம்பித்தது.

1967 தேர்தலில் பல இடங்களில் தோற்றதால்தான் காங்கிரஸ் சரிந்து வருகிறது என்று கூறுவது ஆழ்ந்த கருத்தாக இருக்க முடியாது.

தன்னைத்தானே வெல்லமுடியாததால்தான் அந்த அமைப்பு பல இடங்களில் மற்றைய கட்சிகளை வெல்ல முடியவில்லை.

தனித் தனியே எல்லா மாநிலங்களிலும் கட்சி அடிப்படையில் பலம் பொருந்திய அமைப்பாக 1967 வரை காங்கிரஸ் இருந்த போதிலும், மொத்தமான ஒரு அனைத்திந்தியத் தலைமையை—கூட்டுபலத்தை — அது நேருவுக்குப் பிறகு பெற்றதே இல்லை.

இக்கட்டான இரண்டு நேரங்களில் இரண்டு முறை பிரதமர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது எதனைக் காட்டுகிறது என்பதெல்லாம் உணர்ச்சிகளின் ஒப்புதலினைப் பெறுமே ஒழிய, உண்மை நிலையினைக் காட்டுவதாக இருக்காது.

கட்சியின் நலமின்மைதான் நேருவுக்குப் புவனேசுவர் மாநாட்டின்போது உடல் நலத்தைப் பாதித்தது—உள்ள நலத்தைக் கெடுத்தது என்பது உலகத்து இதழ்களில் அச்சேறிவிட்ட செய்தி—எனவே அவருக்குப் பின் அவருக்காக இருதலைமையினைத் தேர்ந்தெடுத்தது அடிப்படைக் குறைபாட்டினை மூடிமறைத்துவிட்டது.

தேசீயமயம்—பொதுத்துறை—நில உச்சவரம்பு—போன்ற பொருளாதாரக் கொள்கையில் ஒருமித்த குரலைக் கொடுப்பதில் "காங்கிரஸ்கடை நிலைக்குப்போய் விட்டது" என்று தனது கடைசி நாட்களில் மனம் நெக்குருகிறார் நேரு என வருணித்த அந்த அமைப்பு அவருக்குப்பின்

ROCKFORT
BRAND
DALMIA
CEMENT

இப்பொழுது
தாராளமாகக் கிடைக்கிறது
கட்டுப்பாடுகள் ஒன்றும் இல்லாமல்

A DALMIA ENTERPRISE

டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் அண்டு வொர்க்ஸ்: டால்மியாபுரம் (சென்னை மாநிலம்)
ஸோல் ஸெல்லிங் ஏஜன்ட்ஸ்: சிமெண்ட் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் பிரைவேட் லிமிடெட
டால்மியாபுரம் (சென்னை மாநிலம்)

தேசிய மொழி
மதுவிலக்கு

போன்ற மக்கள் பிரச்சனைகளில்கூட ஒரு ''ஜனரஞ்சக'' மான முடிவினை எடுக்க முடியாமல் பிளவுபட்டு நிற்கிறது.

அனைத்திந்திய தனித் தலைமை என்ற நிலையிலிருந்து அனைத்திந்திய கூட்டுத் தலைமை என்ற மாற்றம் இடம் பெற்றிருந்தும் அதில் அங்கம் வகிப்பவர்கள் இன்னும் இந்தியத் தலைவர் என்ற அந்தஸ்தினைக் கட்சிக்குள்ளேயே பெற்றுர்களில்லை.

அதுல்யாவும் காமராசரும், பாட்டிலும் தேசாயும் இந்திராவும் இன்ன பிறரும்

தேசிய மொழிக் கொள்கையில்
தேசிய மயப் பிரச்சனையில்
மதுவிலக்குப் போன்ற சீர்திருத்தச் சட்டங்களில்

கட்சிக்குள் பெற்றிருக்கும் அனைத்திந்தியத் தலைமையின் வலிவென்ன? கொடுத்துள்ள கட்டுக்கோப்பு எவ்வளவு?

அனைத்திய இலக்கணத்துக்கான ஒரே கட்சி என்று தன்னைத் தானே கூறிக்கொள்ளும் காங்கிரஸ் அமைப்பு இந்தியா பூராவுக்குமான — பொதுவான— அவசியமான—அடிப்படையான தேவைகளைக்கொண்ட எந்தப் பிரச்சனையில் ஒன்றுபட்டு—ஒருமித்து நின்றிருக்கிறது?

மையப் புள்ளி இல்லாது வரையப்பட்ட ஒழுங்கற்ற சக்கர வடிவத்துக்கும் அனைத்திந்தியக் கொள்கை இல்லாத காங்கிரசுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது!

மத்திய நிர்வாகம் என்ற ஒரு பற்றுக் கோடும் 1967ல் அற்றுப்போயிருந்தால் காங்கிரசின் 'அனைத்திந்திய அமைப்பு' இன்னும் வெட்ட வெளிச்சமாயிருக்கும். பிள்ளைமேல் கோபம் இருந்தாலும் 'பெற்ற கடன்' என்று கூறி அனுசரித்துப் போகும்—தாய் தந்தையரைப்போல் இன்று ''மத்திய அரசில் காங்கிரஸ் நிர்வாகம்'' என்ற ஒரே ''பாசவலை''தான் ஏதோ அக்கட்சியினை இணைத்து நிற்கவைத்துக் கொண்டிருக்கிறது.

பல்வேறு மாநிலங்களில் இன்று கூட்டணிக் கட்சிகளின் ஆட்சி நடப்பதைப் போல காங்கிரசின் மத்திய தலைமை, மாநிலத் தலைமைகளின் ஒரு சந்திப்பாகத்தான் இருக்கிறதே தவிர அனைத்திந்தியாவுக்குமான ஒரே தலைமையாக இல்லை. மாநிலக்காங்கிரசுகள் சேர்ந்த ஒரு அமைப்பாகத்தான் அனைத்திய காங்கிரஸ் கட்சி இருக்கிறதே தவிர அது தன்னைத் தானே விளம்பரப்படுத்திக் கொள்ளுவதைப்போல இந்தியா பூராவுக்குமான ஒரு கட்சியாக இல்லை.

அனைத்திந்தியக்கட்சியாகஇருக்க முயற்சிக்கிறோம். அந்த பாதையில் செல்கிறோம் என்று கூறி செயல்படுவதுதான் காங்கிரசுக்கட்சி இந்திய ஒற்றுமைக்கு உண்மையாகவே செயல்படுவதாக அமையும். அதனை விட்டு அனைத்திந்திய ஒற்றுமைக்கு நாங்கள்தான் அரசியல் இலக்கணம் என்று வாதாட முனைவது இந்திய அரசியலில் உள்ள சில இயற்கையான பாதக நிலைமைகளை இன்னும் வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகவே அமையும்!

★

3-ம் பக்கத் தொடர்ச்சி

சிதறிப்போகாவண்ணம் சிறப்பான ஏற்பாட்டை கழகத் தலைமை செய்து முடித்திருக்கிறது.

இதன் எதிரொலியில், தங்கள் நிலையைக் கணித்துக் கொண்டுவிட்ட காங்கிரசார், எப்படியாவது வாக்குகளைச் சிதற அடித்துவிட வேண்டும் என்று முனைந்து செயல்படுகிறார்களோ என்றும் சந்தேகப்பட இடமுண்டு.

இந்நிலையில், கழகத் தோழர்களின் முயற்சி தீவிரமடையவேண்டும் என்பதைத் தவிர வேறேதுமிருக்க இடமில்லை.

கடந்த இருபதாண்டுக் காலத்தில் நாடாண்ட காங்கிரஸ் கட்சி, எதிர்க்கட்சியாக்கப்பட்டுவிட்ட பின்னர், இன்னமும் நாட்டில் பல குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டிக்கொள்ள வெட்கப்படாமல் முன் வந்திருப்பதைக் காணும்போது, தாங்கள் கடந்த காலத்தில் எதுவும் நன்மை செய்ய முடியாதிருந்த கையாலாகாத் தனத்திற்கு ஒப்புதல் வாக்கு மூலம் கொடுப்பதாகத்தான் பொருள் கொள்ளமுடியும்.

அல்லது, தாங்கள் செய்ய முடியாதிருந்த நிலைமையைக் குற்றச்சாட்டுக்கள் என்பதன் மூலம் விளக்கிக் காட்டி ஆட்சிப் பொறுப்புக்குவந்துள்ள கழகம் அதனைச் செய்யவேண்டும் என்று விரும்புகிறது—கூறுகிறது என்று பொருள்கொள்ள வேண்டும்.

காங்கிரசுக் கட்சியின் தலைவர் என்று நம்பப்படும் சி. சுப்பிரமணியம் அவர்கள் "காங்கிரஸ் வென்றால்..." என்று புள்ளிகள் இட்டு நிறுத்தி, பலப்பல வாக்குறுதிகளையும் கொடுக்க முன்வருகிறார் என்பதனை நினைக்க நினைக்க நமக்குச் சிரிப்பும் வருகிறது; பரிதாப உணர்ச்சியும் மேலோங்குகிறது.

> "காங்கிரஸ் கட்சியினர் யாரும் எந்தத் தவறும் செய்யாமலிருக்க காங்கிரஸ் உத்திரவாதமளிக்கிறது"

என்ற பொருள்படவும் வாக்குறுதிகள் தரப்பட்டுள்ளன. இதிலிருந்து பெறப்படுவது—

> இதுவரையில் இருந்த, இருக்கிற எல்லா காங்கிரசாரும் ஒழுங்கீனக் குற்றச்சாட்டுக்கு உரியவர்களாகிறார்கள்

என்பதல்லவா! இந்நிலையில் மீண்டும் அவர்களுக்கு எதற்கு மாநகராட்சி அதிகாரம்? வாக்குகளைப் பிரித்துவிடச் செய்கின்ற முயற்சிகள்தான் எற்றுக்கு? சுயேச்சைகளுக்குத் 'தீனி' போடும் ராஜதந்திர முயற்சி எதற்குத் தேவைப்படுகிறது?

கடந்த 19 மாத காலத்தில் கழகத்தின் சாதனைகளைப் பட்டியல் போட்டுக் காட்டினாலே போதும்—காங்கிரஸ் மூலைக்குத் துரத்தப்படும்!

நாடு நகரெங்கும் வேண்டாம் — சென்னையில் மட்டும் நின்றுகொண்டிருந்த அரிசிக் 'கியூ'வை முற்றாக ஒழித்துக் காட்டிய அந்த ஒரு சாதனை மட்டுமே போதும் — காங்கிரசுக்கு இறுதிச் சடங்குகளையும் முடித்துவிட.

குடிநீர்ப் பிரச்னையில் கடந்த 10 ஆண்டுக் காலமாக முட்டுக்கட்டை போட்டு வந்த நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைத்து, ஒரு திட்டத்தை உருவாக்கிக் காட்டி, திட்டக்கமிஷனின் ஒப்புதல்பெறும் நிலையையும் எய்தி இருக்கிறதே கழகம் — அது ஒன்று போதும், காங்கிரசின் முகத்துக்கு முக்காடு போட!

காங்கிரஸ் செய்து வந்திருக்கிற ஜனநாயகப் படுகொலைகளின் பட்டியல்களைத் தொகுத்துக் காட்டினாலே போதும்—சர்வாதிகார நடைமுறைகளை விரித்துக் காட்டினாலே போதும்—காங்கிரசுக்கு மரண அடி கொடுக்க!

எல்லாவற்றுக்கும் மேலாக, தங்களுக்கு வாக்களிக்காத வாக்காளர் பெருமக்களை, முட்டாள்கள் என்றும், குடியர்கள் என்றும், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் என்றும், நச்சுக்கிருமிகள் என்றும் வாய்வந்த போக்கில் வசைபொழிந்த இழிச்செயலை எடுத்துக் காட்டினாலே போதும்—காங்கிரஸ் சுவடு தெரியாமல் மறைந்துபோக!

படியரிசித்திட்டப் பலனால் சுமார் ஒரு கோடிப்பேர் பயன்பட்டு வருவதைக்கூட எடுத்துக் காட்ட வேண்டாம்—

கழகக் கொள்கைகள் காரணமாக விலைவாசிகள் வீழ்ச்சியடைந்து, உணவுப் பண்டங்களின் பதுக்கல் ஒழிக்கப்பட்டு, தாராள நடமாட்டத்துக்கு வந்திருக்கிறதே—அதைக்கூட எடுத்துக்காட்ட வேண்டாம்!—

உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு மாறாக, கரும்புதான் பயிரிடுவோம்! பயிரிடச் செய்வோம்!! என்று வானளாவக் கதறிக் கூப்பாடு போட்டார்களே, அதைக்கூட எடுத்துக் காட்ட வேண்டாம்—

காந்தியடிகள் தம் உயிராக மதித்த மதுவிலக்குக் கொள்கைக்குக் கல்லறை கட்டிக்கொண்டு வருகிற காங்கிரசின் யோக்யதையையும், அதன் தீமையை உணர்ந்திருக்கிறேன். ஏழை எளிய மக்களின் குடும்பக் கதியைக் கண்ணீர் சோரக் கண்டிருக்கிறேன்—மதுவிலக்குத் திட்டத்தைக் கைவிடமாட்டேன் என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தீவிரமாகச் செயல்படுத்திக்கொண்டு வருகிறார்களே அது ஒன்றை எடுத்துக் காட்டினாலே போதும்—காங்கிரஸ் காலகாலத்துக்கும் மூச்சற்று முடங்கிப் போகும்!

எனவே, காங்கிரஸ் கட்சியின் தகிடுதத்தங்களால் முனைப்புக் காட்டிக்கொண்டுள்ளவர்களையும், காங்கிரசையும் தோல்வியுறச் செய்யவேண்டியது கழகத் தோழர்களின் கடமை மட்டுமல்ல — வாக்காளர் பெருமக்களுக்கும் இது தலையாய கடமையாகும். இதன் மூலம் பாடம் பெறவேண்டியவர்கள் பலர் இருப்பதைப் போலவே, காங்கிரசுக்கும் பாக்கி கொஞ்சம் இருக்கிறதுபோலும்! அந்தப் புனிதப் பணியை மாநகர வாக்காளர்கள் திறம்பட நிறைவேற்றித் தருவார்கள் என்றே நம்புவோம்! கேட்டுக்கொள்வோம்!

மாநகராட்சித் தேர்தல்:

இப்படித்தானா இனியும்?

மாநகராட்சித் தேர்தலுக்குப் பின், மாநகர வாக்காளர் பெருமக்கள் தூற்றப்படுவார்கள்—பழிக்கப்படுவார்கள்! குடிபோதையில் வாக்களித்ததாகக்கூட குற்றச்சாட்டுக்கு இலக்காவார்கள்?

> ஏன்? காங்கிரசும்போட்டி இடுகிறதில்லையா? அது தோல்வியைத் தழுவி துவண்டுபோகப் போகிறதல்லவா! அதனால்!

காங்கிரஸ் தோற்றால் வாக்காளர்கள் மேல் பழி. வென்றால் மக்கள் அனைவரும் மனம் மாறிவிட்டார்கள் என்ற தாண்டவம்!

ஜனநாயக யோக்யர்களின் ஜனநாயக அரசியல் இப்படித்தான் இருக்குமோ?

சாதாரண நோய்களிலிருந்து
நிம்மதியான நிவாரணம் பெற...

ஜலதோஷம்:
மூக்கின் மேலும் உட்புறத்திலும் அமிர்தாஞ்சனத்தை தடவவும். சிறிதளவு அமிர்தாஞ்சனத்தை கொதி நீரில் கரைத்து அதன் நெடியை நுகரவும்.

மார்ச்சளி:
மார்பு மற்றும் முதுகு, கழுத்துப் புறங்களில் அமிர்தாஞ்சனத்தை சூடுபெறத் தேய்க்கவும்.

அமிர்தாஞ்சனம்

75 வருடங்களுக்கும்
மேலாக புகழ் வாய்ந்தது

AMR-3 a

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.